Registered as a NewsPaper

# ஈழநாதம்

Eelanatham — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - iv

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி - 16 | 30-05-2003 | வெள்ளிக்கிழமை | ஓசை 101

**ADVANCER**

கணினி நிறுவனம், புதுக்குடியிருப்பு

எமது நிறுவனத்தில் கீழ்வரும் வகுப்புக்கள் 30.05.03 திகதி மாலை 5 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. கற்க விருப்பமுடை யோர் முன்கூட்டியே தொடர்பு கொள்ளவும்.

1) Diploma in MS-office Application,
2) Certificate in MS-Visual Basic Programming.

மேலதிக விபரங்களுக்கு: (#-7348) நிர்வாகி.

### இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பிற்குப் பதிலாக

# அரசாங்கத்தின் பிரேரணைகள் குறித்து விடுதலைப்புலிகள் வட்டாரத்தில் அதிருப்தி!

## இன்றோ, நாளையோ புலிகளின் பதில் அரசிற்கு அனுப்பிவைக்கப்படலாம்

**இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்த விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்குப்பதிலாக சிறிலங்காப்பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அனுப்பி வைத்துள்ள பிரேரணைகள் விடுதலைப் புலிகள் வட்டாரங்களில் அதிருப்தியையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளதாகவும் பிரதமர் முன்மொழிந்துள்ள பிரேரணைகளுக்கு விடுதலைப் புலிகளின் பதில் இன்றோ அல்லது நாளையோ அனுப்பிவைக்கப்படலாம் எனவும் புலிகள் வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.**

வடக்கு - கிழக்கு அபிவிருத்திப் பணிகளைத் துரிதப்படுத்தும் நோக்கில் வடக்கு - கிழக்கிற்கென போதிய அதிகாரங்களுடன் கூடிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படுதல் வேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்குப் பதிலளிக்கும் வகையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் அனுப்பி வைத்துள்ள பிரேரணையில் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு என்ற விடயம் குறித்து எதுவும் தெரிவிக்கப்படாததோடு, புதிதாகச் சிபார்சு செய்யப்படும் மாற்றுக் கட்டமைப்பில் விடுதலைப்புலிகளின் பாத்திரம் குறித்துத் தெளிவான

(iv ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகம் என்பது அரசியல் யாப்பிற்குப் புறம்பானது

### சிறிலங்காப் பிரதமர் ரணில்

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகம் என்பது அரசியல் யாப்பிற்குப் புறம்பானது என்று சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆசிய தாராளவாதிகள் மற்றும் சனநாயகவாதிகள் சபையின் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் அவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் மேலும் அதிக புரிந்துணர்வுடன் பிரச்சினையை நோக்க வேண்டும் என்று தனது உரையில் சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் அரசாங்கம் என்ற வகையில் அரசின் சட்ட யாப்பிற்கு உட்பட்டே என்னால் செயற்பட முடியும். நான் பரிந்துரைத்துள்ள அமைப்பு போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துக்களையும் பார்வையையும் மிகவும் நெருக்கமாக பிரதிபலிக்கும்.

இனப்பிரச்சினைக்கான இறுதித்

(iv ஆம் பக்கம் பார்க்க)

## உலக சூழல் தினம் தொடர்பாக கிளி. மாவட்டத்தில் விரிவான ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறையினரின் உலக சூழல் தினம் ஏற்பாட்டுக் குழுவுடன் கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகமும், அதனோடு இணைந்து பங்காற்றிவரும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனமும் உலக சூழல் தினத்தினைச் சிறப்புறச் செய்யத் திட்டமிட்டுள்ளன. மே மாதம் 29ஆம் திகதி முதல் ஜூன் 04 வரை சூழல் எழுச்சி வார மாகவும் யூன் 05 தொடக்கம் 19 ஆம் திகதி வரையும் சூழல் பாது

(iv ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இருவர் மீது உவர்மலையில் தாக்குதல்

திருகோணமலை உவர்மலைப் பகுதியில் நேற்று நண்பகல் சிறிலங்கா இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இருவர் இனம் தெரியாதோரின் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளனர்.

உவர்மலை மத்திய வீதியினூடாக இராணுவ முகாம் பகுதியை நோக்கி இவர்கள் சென்று கொண்டிருந்தவேளை,இவர்களை நோக்கிச் சென்ற ஒரு குழுவினர் துப்பாக்கியால் சுட்டும் அரிவாளால் வெட்டியுமுள்ளனர். மக்கள் நடமாட்டம் மிக்க பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. காயமடைந்தவர்கள் திருமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஒருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### வீரவணக்கம்

முல்லை. மாவட்டத்தின் மன்னாகண்டல் பகுதியில் போராளி ஒருவர் நேற்று முன்தினம் கிணற்றில் மூழ்கி சாவடைந்துள்ளார்.

கப்டன் தூயதம்பி (பாலசுப்பிரமணியம் கமலநாதன், முத்து விநாயகர்புரம், முத்தையன் கட்டு ஒட்டு சுட்டான், (முல்லைத்தீவு) என்ற போராளியே சாவடைந்தவராவார்.

(iv ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். இல் விபத்தில் சிக்கி இளைஞர் பரிதாப மரணம்

யாழ். பலாலி வீதிப் பகுதியில் நேற்று மதியம் இடம் பெற்ற விபத்தில் சிக்கி இளைஞரொருவர் பலியானார்.

நீர்வேலி போயிட்டியைச் சேர்ந்த சந்திரன் சிறிகரன் (வயது-17) என்பவரே யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயனளிக்காத நிலையில் உயிரிழந்தார்.

உழவு இயந்திரமொன்றில் சீமெந்து குழைக்கும் இயந்திரமொன்றை ஏற்றிச்சென்று கொண்டிருந்த வேளை வாகனம் தடம் புரண்டது. இதன் போது சீமெந்து குழைக்கும் இயந்திரம் இவர் மீது வீழ்ந்தமையால் அவர் பரிதாபமாக உயிரிழந்தார். (27)

## புத்தூரில் புதிய படைமுகாம் அமைக்கும் படையினருக்கு எதிராக மறியல்

(வடமராட்சி)

புத்தூர் நவக்கிரி நிலாவரைப் பகுதியில் கமநல சேவை மற்றும் கால் நடை விவசாய திணைக்களத்திற்குச் சொந்தமான பதினாறு ஏக்கர் காணிப் பரப்பளவில் புதிய படைத் தளமொன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் படைத்தரப்பின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வலி. கிழக்கு வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று மறியல் போராட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது. நேற்றுக் காலை 10.30 மணியளவிலிருந்து 11. 45 மணி வரை புத்தூர் சுன்னாகம் வீதியில் நிலாவரை சந்திப் பகுதியில் நூற்றுக் கணக்கில் திரண்ட விவசாயிகள்

(iv ஆம் பக்கம் பார்க்க)



### தமிழ்ச்செல்வன், பேணாட் குணதிலகவிற்கு

## நமது எதிர்பார்க்கைகள் குறித்து ஜரோ.நாட்டுத் தூதுவர்கள் கடிதம்!

(கொழும்பு)

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் பேணாட் குணத்திலக ஆகியோருக்கு சிறிலங்காவில் உள்ள ஐரோப்பிய தூதரகங்கள் கூட்டுக் கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கடிதத்தை சிறிலங்காவில் உள்ள பிரான்ஸ், ஜேர்மனி, நெதர்லாந்து, சுவீடன், சுவிற்சர்லாந்து, ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளின் தூதரகங்கள் இணைந்து தயாரித்து அனுப்பி வைத்துள்ளன.

மே 27ம் திகதி அனுப்பப்பட்ட அக் கடிதத்தில் ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமஷ்டி முறையிலான அமைப்பின் கீழ் அரசியல் தீர்வை நாடுவது மீள் கட்டமைப்பு மற்றும் வளர்ச்சி சார்ந்த நடவடிக்கைகளில் செயற்படுவதற்கான அமைப்புக்களை உருவாக்குவது, அரசியல் தீர்வை எட்டும் செயற்பாடுகளைத் தொடர்புபடுத்தியே சர்வதேச நாடுகள் உதவி வழங்குவது அரசியல் தீர்வை எட்டும் பாதையில் மனித உரிமை நிர்வாகம், அரசியல் கொள்கைகள் போன்றவற்றை பெரிது படுத்துவது குறிப்பிடப்பட்டுள்ளது.

## புளியங்குளத்தில் பாரஊர்தி விபத்தில் ஒருவர் பலி; நான்கு பேர் காயம்!

ஏ-9 பிரதான வீதியில் புளியங்குளம் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் நான்கு பேர் காயங்களுக்குள்ளாகினர்.

கிடுகு ஏற்றிச்சென்ற பார ஊர்தியின் மேல்பகுதியில் இருந்து பயணித்தவர்களே விபத்தில் பாதிப்புக்குள்ளாகியதோடு உயிரிழக்கவும் நேரிட்டது.

எதிரே வந்துகொண்டிருந்த வாகனமொன்றுக்குப் பாரஊர்தி வழிவிட்ட வேளையில் அப்பாரஊர்தி

(iv ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை. மாவட்டத்தில்
# உயர் கல்வி புலமைப் பரிசில் பெறவுள்ளோர் விபரம்

உயர் கல்வி மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு முல்லைத்தீவு கச்சேரி மகாநாட்டு மண்டபத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்த நிகழ்வில் உயர் கல்வி மாணவர்கள் 50 பேர் முல்லை. மாவட்டத்தில் பரிசில்களைப் பெற வுள்ளனர். அம் மாணவர்களின் விபரம் பின்வருமாறு.

வி.ஜெயதினேஸ் யோகபுரம், ய.பகீரதன் யோகபுரம், எம்.சுதன் கற்சிலைமடு, கே.சுசீந்திரன் யோகபுரம், எம்.மயூரன் மாங்குளம், செல்வி.எஸ். ஸ்ரீவித்தியா துணுக்காய், செல்வி ஜே.பூபாலசிங்கம் தண்ணீரூற்று, செல்வி ரி.மேனகா முள்ளியவளை, எம்.சாந்தமேனன் யோகபுரம் மத்தி, ஜீ.மயூரதன் முள்ளியவளை, எஸ்.பார்த்தீபன் செம்மலை, எஸ்.பிரபாகரன் முல்லைத்தீவு, வி.நவஜீவன் வவுனியா, எம்.ஜெயக்குமார் வவு னியா, ஏ.ஜீவழகன் யோகபுரம், வி.லட்சுமிகாந்தன் செம்மலை, எஸ்.ஸ்ரீதர் வற்றாப்பளை, பி.றஜிந்தன் தண்ணீரூற்று, ஆர்.பகீரதன் புதுக்குடியிருப்பு, வி.மகேஸ்வரன் யோகபுரம், செல்வி எஸ்.சுயாதா மல்லாவி, செல்வி ரி.குணரட்ணம் முள்ளியவளை, செல்வி ரி.தர்சினி மன்னார், ஜீ.சதீஸ் புதுக்குடியிருப்பு, செல்வி எஸ். சிவச்செல்வி புதுக்குடியிருப்பு, செல்வி பி.சிவரூபி முள்ளியவளை, எஸ்.பிரபாகரன் முள்ளியவளை, செல்வி ஆர்.சுதாஜினி குமுழமுனை, செல்வி. எஸ். சுபாநந்தினி உடையார்கட்டு, செல்வி வி.மதுரா முள்ளியவளை, செல்வி ஈ.எம்.றசித்ரா புதுக்குடியிருப்பு, செல்வி ரி.சிவதர்சினி உடையார் கட்டு, செல்வி எஸ்.திருச்செந்தூரன் புதுக்குடியிருப்பு, கே.ஜசிந்தன் முள்ளியவளை, செல்வி வி.சின்னத்தம்பி யோகபுரம், செல்வி எஸ். ராதிகா முள்ளியவளை, எம்.சதீஸ் கற்சிலைமடு, செல்வி எஸ்.வினோதினி தண்ணீரூற்று, கே.சிவசங்கர் முள்ளியவளை, செல்வி ஏ.ஏ.ஜஸ்மின் புதுக்குடியிருப்பு, வி.எஸ்.குமார் அம்பலவன் பொக்கணை, செல்வி. பி.எம்.கவிதா புதுக்குடியிருப்பு, செல்வி ஆர்.நமசிவாயம் முள்ளியவளை, செல்வி வி. தீபா புதுக்குடியிருப்பு, செல்வி வி.அருள்சக்தி புதுக்குடியிருப்பு, ஆர்.அமலன் பாண்டியன் குளம், செல்வி. எஸ்.மீரா புதுக்குடியிருப்பு, செல்வி வி.ஜெயசுதா புதுக்குடியிருப்பு, செல்வி எஸ்.எம்.லதிஸ்கா குமுழமுனை, செல்வி ஏ.றஞ்சிதமலர் நெடுங்கேணி. (20)

## ஐ.தே.முன்னணி அரசாங்கத்தின்
# இடைக்கால சபை பரிந்துரை, சுதந்திரக் கட்சியினால் நிராகரிப்பு!

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாகசபை பரிந்துரையை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு நிராகரித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

சனாதிபதி 1995ஆம் ஆண்டு முன்வைத்த வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாக சபைக்கும் ஐக்கிய தேசிய முன்னணி முன்வைத்த இடைக்கால நிர்வாக சபைக்கும் இடையே பாரிய வேறுபாடுகள் உள்ளன என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு சனநாயக வழிக்குத் திரும்பினால் வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கான இடைக் கால சபை ஒன்றை வழங்கலாம் என்று 95ஆம் ஆண்டு சனாதிபதி பரிந்துரைத்தார் என்றும் ஆனால் அதனை ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தவறான வழியில் பிரச்சாரம் செய்ய முயல்கின்றது என்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தெரிவித்துள்ளது.

எந்தவித முன்நிபந்தனையும் இல்லாது வடக்கு-கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக சபை தொடர்பான கருத்துக்களை உருவாக்குவதற்கு சிறிலங்கா அரசு முன்வந்திருப்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது என்றும் அந்தக் கட்சி கூறுகின்றது.

# வலைப்பாடு கிராமத்திற்கு குழாய் நீர் விநியோகம்

(அலுவலக செய்தியாளர்)

கிளி.மாவட்ட புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் பூநகரி முழங்காவில் அபிவிருத்தி நிறுவனத்தினால் கெயர் நிறுவனத்தின் நிதியுதவியுடன் வலைப்பாடு கிராமத்திற்கு குழாய் நீர் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

வேரவில் கிராமத்தில் இருந்து 3கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மேற்படி கிராமத்திற்கு குழாய்மூலம் குடிநீர் வசதியை ஏற்படுத்தும் பொருட்டு கெயர் நிறுவன நிதியுதவியுடன் நேற்று முன்தினம் காலை10 மணியளவில் குழாய்நீர் விநியோகிக்கும் நிகழ்வு நடைபெற்றது. இதில் அரச, அரசசார்பற்ற நிறுவனப்பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

நீண்டகாலமாகக் குடிநீர் தட்டுப்பாடு நிலவிவந்த மேற்படிக் கிராம மக்கள் தற்போது இதனால் பயன்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (பா)

# கரைச்சிப் பிரதேசம் முதலிடம் பெற்றது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலர் பிரிவுகளுக்கிடையிலான 19வது மாவட்ட விளையாட்டுப் போட்டிகள் கிளி. மத்திய விளையாட்டு மைதானத்தில் நேற்று நிறைவு பெற்றது. கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை ஆகிய நான்கு பிரதேச பிரிவுகளைச் சேர்ந்த வீரவீராங்கனைகள் கலந்து கொண்ட இப் போட்டியில் 221 புள்ளிகளைப் பெற்று கரைச்சிப் பிரதேசம் முதலாம் இடத்தையும், 155 புள்ளிகளைப் பெற்று கண்டாவளைப் பிரதேசம் இரண்டாம் இடத்தையும், 54 புள்ளிகளைப் பெற்று பளைப் பிரதேசம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற நேற்றைய இறுதிநாள் நிகழ்வில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. நடந்து முடிந்த மேற்படி போட்டியில் முன்னைய போட்டி சாதனைகள் சில முறியடிக்கப்பட்டு புதிய சாதனைகள் ஏற்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

# முல்லை.மாவட்ட வைத்தியசாலைக்கு வவுனியா வைத்தியர்கள் வருகை

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு நாளை சனிக்கிழமை வவுனியா பொது வைத்திய சாலையில் இருந்து வைத்தியர்கள் குழு வருகைதந்து நோயாளருக்கு சிகிச்சையளிக்க இருக்கின்றார்கள்.

எனவே சிகிச்சை பெற விரும்புவோர் அன்றைய தினம் சென்று சிகிச்சை பெறலாம் என மாவட்ட வைத்தியஅதிகாரி கேட்டுக் கொள்கிறார். (26)


# காணவில்லை



## கந்தையா இரத்தினம்

அராலி தெற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற பரந்தன் இரசாயனக்கூட்டுத்தாபன ஊழியர் திரு. **கந்தையா இரத்தினம்** அவர்கள் 18.05.2003 அன்று தெஹிவளையிலிருந்து புறப்பட்ட பின் காணாமற்போயுள்ளார். வயது 65, உயரம் 5'9", தேசிய அடையாள அட்டை இலக்கம் 390920121**v**. யாராவது இவரைப் பற்றிய தகவல் அறிந்தால் கீழ்க்காணும் முகவரிக்கு தயவு செய்து உடன் அறியத்தரவும்.

தொடர்புகளுக்கு :

**பா. முருகானந்தன்,**
**தொலைபேசி : 021-2225272, 021-2223641**
**யாழ்ப்பாணம் (பிறவுண் வீதி).**

(சி-8129)

# கண்ணீர் அஞ்சலி



தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் திரு.நல்லதம்பி அருண் அவர்களின் அன்புத்தாயாரான திருகோணமலை சேனையூரை வதிவிடமாகக் கொண்ட அமரர் **நல்லதம்பி பாக்கியம்** அவர்கள் 29.05.2003 அன்று இறைபதம் அடைந்து விட்ட செய்தியை அறிந்து துயர் கொள்வதுடன் இவரின் துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## அமரர் நல்லதம்பி பாக்கியம்

**பணியாளர்கள்,**
**தமிழீழ சுகாதார சேவைகள்.**

(8130)

# 11ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 08 11 1970

மறைவு: 30 05 1992



## கப்டன் கெனடி / பாவாணன்
## பத்மநாதன் மயூரன்

புன்னாலைக்கட்டுவன் தெற்கு

*நாளெல்லாம் உன் நினைவு*
*நாவெல்லாம் உன் பேச்சு.*
*தேனாக இனித்த குரல் தேயுமென்று*
*யார் கண்டார்.*
*மாறாத உன்நினைவால் – வாழ்வு*
*வீணாகப் போகுதையா.*

**உன் நினைவுடன்**
**பெற்றார், சகோதரர், மாமன்மார்.**

(3289)

# தமிழீழ மாவட்ட நீதிமன்று - முல்லைத்தீவு
## பகிரங்க ஏலவிற்பனை

வழ.இல. 29/1995.
தன்மை, நானாவிதம்.

சோ.திலகசேகரம்,
பூதன்வயல் முள்ளியவளை,
வழக்காளி.

எதிர் சி. கனகரத்தினம்,
கணுக்கேணி கிழக்கு,
முள்ளியவளை.
எதிராளி.

நீதிமன்றால் 2002.11.06 ஆம் நாள் நடுக்கப்பட்ட கீழ்க்காணும் ஆதனடாப்பில் விபரிக்கப்படும் ஆதனமானது எதிர்வரும் 2003.06.25 ஆம் நாள் நீதிமன்றால் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படவுள்ளது.

இவ் ஏலவிற்பனை தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிக்க விரும்புவோர் 2003.06.23 ஆம் நாளுக்கு முன்னர் நீதிமன்றில் தோன்றி எழுத்துமூலம் தெரிவிக்குமாறு அறியத்தரப்படுகின்றது.

ஆதனடாப்பு,
வடமாகாணம் முல்லைத்தீவு பெரும்பிரிவு கரைத்துறைப்பற்று முள்ளியவளைப் பகுதி கணுக்கேணி இறை கயிட்டையடி வளவு விசாலம் ஏக்கர் (2,1/2) இதில் பிரிவிட்ட 1/6 பங்கு விசாலம் றூட் (1) ஒன்று பேட்ஸஸ் (26,2/3) இருபத்தாறுடன் மூன்றில் இரண்டு எல்லை கிழக்கு கிராமச்சபை றோட் தெற்கு பாலசிங்கம் சிவயோகத்திற்குரிய வாதனம் மேற்கு செல்லையா இராசம்மாவுக்குரிய வாதனம் வடக்கு றோட்டு இதனடங்கலும் இதனைச் சேர்ந்தவைகளும்.

நீதிமன்றத்தின் கட்டளைப்படி,

வ/சட்டவாளர்,
தமிழீழம்.

**பதிவாளர்,**
**தமிழீழ மாவட்ட நீதிமன்றம்,**
**முல்லைத்தீவு.**

(3223)

# ஈராக்கில் இஸ்லாமிய குடியரசமைக்க ஈரான் முயன்றால் முறியடிக்கப்படும்

## அமெ.பாதுகாப்புத்துறை அமைச்சர் எச்சரிக்கை



(வாஷிங்டன்)

**அமெரிக்கப் பாதுகாப்புத்துறை அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் ஈரானுக்குக் கடும் எச்சரிக்கை விடுத்திருக்கின்றார். அண்டை நாடான ஈராக்கில் இஸ்லாமிய குடியரசு அமைப்பதற்கு ஈரான் எடுக்கும் எந்த நடவடிக்கையையும் அமெரிக்கா கடுமையாக முறியடிக்கும் என ஈரான் தெரிந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் எச்சரித்திருக்கின்றார்.**

எனினும் பயங்கரவாதத்தை ஒழிக்கும் நடவடிக்கைக்கு ஈரான் போதியளவு ஒத்துழைக்கவில்லை எனவும் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்காவின் வேண்டுகோளை ஏற்று 500, இற்கும் அதிகமான அல்கொய்தா ஆதரவாளர்களைக் கைது செய்து ஈரான் நாடு கடத்தியது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, ஈராக் போர் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாகவே பாரிய பேரழிவு ஆயுதங்களை சதாம் ஹுசைன் அழித்திருக்கலாமென அமெரிக்கப் பாதுகாப்புத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஈராக் படையினர் போரின் போது ஏன் பாரிய அழிவு ஆயுதங்களைப் பாவிக்கவில்லை என்பது பற்றி தனக்குத் தெரியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்கப் பாதுகாப்புத்துறை சார்ந்த உயர் பதவியில் உள்ள ஒருவர் ஈராக்கில் இனி பாரிய அழிவு ஆயுதங்களைக் கண்டு பிடிக்க முடியாது போகலாமென அதிகார பூர்வமாக அறிவித்திருப்பது இதுவே முதல் தடவையாகும். அமெரிக்காவும், பிரித்தானியாவும் ஈராக் மீது யுத்தம் தொடுப்பதற்கு பாரிய அழிவு ஆயுதங்களை அந்த நாடு வைத்திருக்கின்றது என்பதையே காரணமாகக் கொண்டு இருந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# புஷ், ஏரியல்ஷரோன், முகமட் அப்தாஜ் கலக்கும் உச்சிமாநாடு ஜூன் 4 இல்

(வாஷிங்டன்)

அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ். டபிள்யூ புஷ், இஸ்ரேலிய-பலஸ்தீனத் தலைவர்கள் கலந்து கொள்ளும் தனது முதலாவது உச்சி மாநாட்டை அடுத்த வாரம் நடத்தத் திட்டமிட்டுள்ளார்.

மத்திய கிழக்கு சமாதானத் திட்டம் பற்றி பலஸ்தீனப் பிரதமர் முகமட் அப்தாஜ் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் ஆகியோருடனும் பேசக்கூடிய நிலை இருப்பதாக வெள்ளை மாளிகையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். இந்த உச்சி மாநாடு ஜூன் 04 ஆம் திகதி அக்காபா என்ற ஜோர்தானிய நகரில் நடைபெறவுள்ளதாகவும் பேச்சாளர் தெரிவித்துள்ளார். இந்த உச்சிமாநாட்டை தடம்புரளச் செய்யக்கூடிய விடயம் எவை என அவர் கூற மறுத்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# அமெரிக்காவின் நடவடிக்கைகள் மனித உரிமைகள் ஆணைக்குழு கண்டனம்

(லண்டன்)

அமெரிக்காவின் நடவடிக்கைகள் காரணமாக மனித உரிமைகள் ஒடுக்கப்பட்டதாக சர்வதேச சட்டங்கள் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழு கண்டனம் வெளியிட்டுள்ளது.

வளைகுடா யுத்தம் நிறைவு பெற்றுள்ள நிலையில் ஈராக்கின் பிரச்சினைகளைத் தீர்ப்பது பற்றி கவனம் செலுத்துமாறு சர்வதேச சமூகத்தை இவ் ஆணைக்குழு கோரியுள்ளது.

இதேவேளை அமெரிக்க பயங்கரவாதத்திற்கெதிராகத் தொடுத்துள்ள யுத்தம் உலகை மேலும் பயங்கரமாக மாற்றியுள்ளது என சர்வதேச மன்னிப்புச்சபை கூறியிருந்தது தெரிந்ததே.

# அமைச்சர் சந்திரசேகரனைச் சந்திக்க களுத்துறை தமிழ்க் கைதிகள் விருப்பம்

## - கடிதமும் அனுப்பி வைப்பு

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் சிறைக்கைதிகள் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான சந்திரசேகரனைச் சந்தித்து கலந்துரையாட விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான கடிதம் ஒன்றினை சிறைச்சாலை ஆணையாளரினூடாக அமைச்சர் சந்திரசேகரன் அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளனர். அமைச்சர் கடந்த 19 ஆம் திகதி களுத்துறைச் சிறைக் கைதிகளுக்கு கடிதம் அனுப்பியிருந்தமையினாலும் கைதிகள் சந்திக்க விருப்பம் தெரிவித்துள்ளனர்.

# வவு. நலன்புரி நிலையத்திலிருந்து 41 குடும்பங்கள் முல்லைக்கு வந்தன

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் இருந்து இராணுவ நடவடிக்கை மூலம் இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த 41 குடும்பங்கள் மீளக் குடியமர்விற்காக முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வந்து சேர்ந்துள்ளனர்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை மூலம் இடம்பெயர்ந்து வவுனியாவில் தங்கியிருந்த மக்கள் ஓயாத அலைகள் இராணுவ நடவடிக்கை மூலம் புலிகளால் முல்லை மாவட்டத்தின் பல பகுதிகள் மீட்கப்பட்டதன் பின்னர், மீளக் குடியமர்ந்து வருகின்றனர். நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த 41 குடும்பங்கள் மீளக் குடியமர்விற்காக நேற்று முன்தினம் முல்லை நகருக்கு வந்து சேர்ந்துள்ளனர்.


## பெண்களின் பிரச்சினைகளை ஆராய மன்னாரில் சங்கம நிகழ்வு

(மன்னார்)

பெண்களின் பிரச்சினைகளை ஆராயும்பொருட்டு மகளிர் அமைப்புக்களின் சங்கமம் என்னும் நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

மன்னார் நகர மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வு தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறவுள்ளதாகவும் இந்நிகழ்வில் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் சிறப்புரையாற்றவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## சூழல் சுடர்



# செவ்வாய்க்கிரகத்தில் மனிதர்கள்; 2025ஆம் ஆண்டில் சாத்தியம்!

## ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் அறிவிப்பு

(வாஷிங்டன்)

எதிர்வரும் 2025 ஆம் ஆண்டில் செவ்வாய்க் கிரகத்திற்கு மனிதர்கள் சென்று வருவார்கள் என்று ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

செவ்வாய்க்கிரகத்தில் நீர், காற்று இருக்கின்றது. சிறிய உயிரினங்கள் வாழ்கின்றன என்று ஏற்கனவே கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது.

இப்போது ஐரோப்பிய நிறுவனம் செவ்வாய்க்கு ஆட்களை அனுப்புவதற்கு முயற்சி செய்து வருகின்றது.

# வீரப்பனின் பெயரைக் கூறி அ.தி.மு.க. பிரமுகர்களுக்கு மிரட்டல்

(சென்னை)

வீரப்பனின் பெயரைப் பயன்படுத்தி அ.தி.மு.க. பிரமுகர்களுக்கு மிரட்டல் விடுக்கப்படுவதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

அ.தி.மு.கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் பெருமாள் மற்றும் அக்கட்சியின் சட்டசபை உறுப்பினர் கோவிந்தராஜ் ஆகியோரை வீரப்பன் கடத்தப் போவதாக தொலைபேசியில் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அவர்களுக்கு பொலிசார் பாதுகாப்பு அளித்துள்ளனர்.

ஆனால், வீரப்பன் இத்தகைய மிரட்டல்களை விடுத்திருக்க முடியாது என்றும் அ.தி.மு.க.கட்சியில் நிலவிவரும் உட்பூசல் நிலையே இதற்கு காரணமாக இருக்கக் கூடுமென்றும் சந்தேகிக்கப்படுகின்றது.

# சோழர் சிறுவர் பூங்காவின் 10 ஆம் ஆண்டு நிறைவு விழா

(அலுவலக செய்தியாளர்)

ஜேர்மன் தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் சமூக மேம்பாட்டு நிறுவனம் நடத்தும் சோழர் சிறுவர் ஊட்ட மேம்பாட்டுப் பூங்காவின் 10வது ஆண்டு நிறைவு விழாவும் பூங்காச் சிறுவர்களின் விளையாட்டு விழாவும் நேற்று முன்தினம் மேற்படி சிறுவர் ஊட்ட மேம்பாட்டுப் பூங்காவில் இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் தேசியக் கொடியை ஊரக வளர்ச்சித் திட்ட துணைப் பொறுப்பாளர் விபுலன் ஏற்றிவைத்தார். மங்கல விளக்கினை விடுதலைப்புலிகளின் நடமாடும் மருத்துவப்பிரிவுப் பொறுப்பாளர் தேவா மற்றும் இரகுநாதக் குருக்கள் ஆகியோர் ஏற்றிவைததனர்.

சோழர் பூங்காவின் விளையாட்டு விழாவிற்கான ஒலிம்பிக் தீபத்தை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வெளியீட்டுப் பிரிவைச் சேர்ந்த வேலணையூர் சுரேஸ் ஏற்றி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து சிறுவர் பூங்காவின் விளையாட்டு விழா ஆரம்பமானது. விளையாட்டு விழாவின் நிறைவில் ஆசியுரைகளை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் திட்டப் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி, தேவா ஆகியோர் நிகழ்த்தினர். நிகழ்வின் இறுதியில் சோழர் பூங்காவின் 10 ஆம் ஆண்டு சிறப்பிதழ் வெளியிட்டு வைக்கப்பட்டது.

தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்டப்பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி உரையாற்றும்போது,

1993 ஆம் ஆண்டு 5ம் மாதம் 28ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சோழர் பூங்கா 10 ஆண்டுகளில் மிகக்கடினமான பாதைகளைக் கடந்து வெற்றிநடை போட்டு வருகிறது இது எமக்கு மிகவும் மகிழ்ச்சி தருகிறது.

தேசியத் தலைவர் அவர்களின் சிந்தனைக்கேற்ப எதிர்காலச் சிற்பிகளான புதிய இளம்பரம்பரை தோன்றி மதியுரைஞர்களாக, தேசப் பற்றாளர்களாக வளர்ந்து எமது நாட்டை நிர்வகிக்கும் ஆட்சியாளர்களாக உருப்பெற வேண்டும். இதற்காக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சிறுவர் நலன்களில் முக்கிய கவனம் எடுத்து பூரண ஒத்துழைப்பை நல்கிவருகிறது என்று தெரிவித்தார். (லோ)

## பாம்பு கடித்து குடும்பஸ்தர் மரணம்

முல்லைத்தீவு கள்ளப்பாட்டைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான முத்துக்குமாரு அருமைத்துரை (மகேந்திரம்) என்பவர் வீதியில் சென்று கொண்டிருந்த வேளை 25.05.2003 இரவு 10.00 மணியளவில் பாம்புக்கடிக்கு இலக்காகி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்போது மரணமடைந்துள்ளார். (20)

# டோக்கியோ மாநாட்டில் முன்வைக்கப்படும் அபிவிருத்தி தொடர்பான அறிக்கை வெளியீடு

டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டில் முன்வைக்க இருக்கும் அபிவிருத்தி தொடர்பான அறிக்கை நேற்று வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

85 பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கையை உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புக்கள் ஆகியவை இணைந்து தயாரித்துள்ளன.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களுக்கான அபிவிருத்தித் தேவைகள் குறித்து இந்த அறிக்கையில் விரிவாக விபரிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை மனிதாபிமான உதவிகள் மற்றும் பாதுகாப்பு சமூக கட்டமைப்புக்களின் மீள் செயற்பாடு, பொருளாதாரக் கட்டமைப்புக்களை மீள் சீரமைப்பது அபிவிருத்தி மற்றும் நிறுவனங்களை உறுதிப்படுத்துவது ஆகிய நான்கு தலைப்பின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, மீள்குடியேற்றம், பாதுகாப்பு, சுகாதாரம், கல்வி, வீடமைப்பு கட்டட அமைப்பு, விவசாயம், வாழ்வாதாரம், மீள் புனரமைப்பு ஆகிய எட்டு விடயங்கள் குறித்த அறிக்கை விரிவாக ஆராய்ந்துள்ளது.

வடக்கு - கிழக்கு மாவட்டங்களைத் தவிர போரின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட அண்டை மாவட்டங்களான புத்தளம், அநுராதபுரம், பொலநறுவை, மொனராகல ஆகிய மாவட்டங்களுக்கான தேவை மதிப்பீடும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் நகல்கள் அடுத்த சில நாட்களுக்குள் நிதி வழங்கும் நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## - நேற்று சிறப்புற நடைபெற்ற-
# புலம்பெயர்வும் வெளிப்பாடுகளும் கருத்தமர்வும் கலந்துரையாடலும்

புலம்பெயர்வும் வெளிப்பாடுகளும், கருத்தமர்வும் கலந்துரையாடலும் நேற்று பிற்பகல் 3.30 மணிக்கு அழகியல் கலாமன்ற முதல்வர் க. விஜயசேகரன் தலைமையில் கலாமன்ற மண்டபத்தில் நடைபெற்றது.

புகலிட வாழ்வின் பிரச்சினைகள், புகலிடச் சமூக நிலைமைகள், புகலிடத் தமிழர்களின் எதிர்காலம் குறித்த கருத்துக்கள் மேற்படி கருத்தமர்வில் ஆராயப்பட்டன. அதனைத் தொடர்ந்து கலந்துரையாடல்களும் இடம் பெற்றன.

கவிஞர் கி. பி. அரவிந்தன், விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் வே. பாலகுமாரன் ஆகியோர் கருத்துரை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# புலிகள்-முஸ்லிம் பிரதிநிதிகள் வவுணதீவில் சந்திப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்களுக்கும், முஸ்லிங்களுக்கும் சொந்தமான காணிகள் தொடர்பான பிரச்சினை குறித்து ஆராய்ந்து வரும் விடுதலைப் புலிகள் மற்றும் முஸ்லிம் தரப்புப் பிரதிநிதிகள் உள்ளடக்கிய குழுக்கூட்டம் நேற்று வவுணதீவு யுத்த சூனியப் பிரதேசத்தில் நடைபெற்றது.

இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் மாவட்டப் பதில் தலைமைக் கண்காணிப்பாளர் லைலா படாபே தலைமையில் நடைபெற்ற நேற்றைய கூட்டத்தில் மாவட்ட சிறப்புத்தளபதி ரமேஸ் தலைமையில் புலிகள் குழுவினரும், பிரதியமைச்சர் பசீர் சேகுதாவுத் தலைமையில் முஸ்லிம் தரப்புப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் புலிகள் தரப்பில் இடம் பெற்றிருந்தார்.

இக்கூட்டத்தில் குறிப்பாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் முஸ்லிங்கள் விவசாயச் செய்கையில் ஈடுபட்டிருப்பது தொடர்பாக ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களுடன் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் விசேடமாகத் தமிழர்களுக்குச் சொந்தமான காணிகளில் இடம்பெற்ற அத்துமீறல்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டு ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.





சந்திப்பில் கலந்துகொண்ட புலிகள், முஸ்லிம் தரப்பு பிரதிநிதிகள்

# விசேட சந்திப்பு

(அலுவலக செய்தியாளர்)

உலக சூழல் தினம் தொடர்பான பங்காளி நிறுவனப் பணியாளர்களுடனான விசேட சந்திப்பொன்று நடைபெறவுள்ளது.

இன்று கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்டச் செயலகத்தில் காலை பத்து மணிக்கு இச்சந்திப்பு நடைபெறவுள்ளது. அத்தோடு நுண்கருத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றும் பிற்பகல் இரண்டு மணிக்கு கிளிநொச்சி அரச செயலகத்தில் நடைபெறவுள்ளது. (பா)

### இடைக்கால...

தீர்வு மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பின் மூலம் மக்களின் விருப்பத்தை அறிந்த பின்னரே எடுக்கப்படும்.

நாட்டின் சட்ட அமைப்பிற்கு உட்பட்ட வகையில் தீர்வொன்றைக் காணவே அரசாங்கம் உத்தேசித்துள்ளது. சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்கம் மேலும் விட்டுக் கொடுக்கும் போக்கை வெளிப்படுத்த வேண்டும்.

டோக்கியோ உதவி மாநாடு நாட்டின் அபிவிருத்திக்கு மிகவும் முக்கியமானது.

பேச்சுவார்த்தை மூலம் இந்த நாட்டில் சகல பிரிவு மக்களும் அதிகாரம் கிடைக்கக்கூடிய சமஷ்டி அமைப்பின் கீழான அரசாங்கம் ஒன்று பற்றிக் கவனம் செலுத்த வேண்டும்.

சமாதான நடவடிக்கைகளில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் மூலம் அதிலுள்ள குறைபாடுகளை அறிந்து கொள்வதற்கு அரசாங்கத்திற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

சமாதானத்தையும் நாட்டின் அபிவிருத்தியையும் கருத்தில் கொண்டு வடபகுதி மக்களைப் போன்றே தென்பகுதி மக்களும் அதற்கு உதவ வேண்டும்.

விடுதலைப் புலிகள் இயக்கம் தனிநாட்டுக் கோட்பாட்டை கைவிட்டிருப்பதும் 'தென்பகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்க அவர்கள் முன்வந்துள்ளமையும் மிகவும் சாதகமானதொரு நிலைமையாகும் என்றும் அவர் கூறினார்.

### புத்தூரில் புதிய...

மற்றும் ஆண், பெண் வேறுபாடின்றி பொதுமக்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும், இப்பகுதிக்கு வந்த அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மறியல் போராட்டத்தில் பங்கேற்க வேண்டாம் என்றும், அவ்வாறு பங்கேற்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு கைது செய்யப்பட்டு 14 நாட்களுக்கு குறையாத சிறைத்தண்டனை வழங்கப்படும் என எச்சரித்திருந்தார்.

எனினும், இதனைப் பொருட்படுத்தாத மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டபோது அங்கு வருகை தந்த கோப்பாய் பிரதேச செயலாளர் சி. சீனிவாசன், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஆகியோர் படைத் தரப்புடன் பேச்சு நடத்தினர்.

இதனையடுத்து இவர்கள் தலைமையிலான குழுவொன்றை மேற்படி படை முகாம் அமைக்கும் பகுதிக்குச் சென்று பார்வையிட அனுமதித்தனர்.

அச்சுவேலி ப. நோ. கூ. ச. கட்டடத்தில் இயங்கிவரும் 511 ஆவது படைப் பிரிவின் முகாமையே தாங்கள் இப்பகுதியில் மாற்ற முற்படுவதாகவும், முகாம் அமைக்கப்படும் காணி அரசுக்குச் சொந்தமானது என்றும் அங்கு படையதிகாரிகளால் பேச்சுக்களின் போது தெரிவிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனினும், போராட்டத்தில் பங்கேற்ற வெகுசன அமைப்புக்களின் பிரதிநிதிகள் மேற்படி காணி குறித்த பகுதியினருக்கேயுரியது என்றும், கட்டடங்களை அமைக்க விரைவில் நிதியொதுக்கப்படவுள்ளது என்றும் இந்நிலையில் இப்பகுதியில் முகாம் அமைப்பதன் மூலம் நிலாவரை குடிநீர் வழங்கல் பாதிப்பு, யாழ். மாவட்டத்திற்கான உரக் களஞ்சியம், கமநல சேவைத் திணைக்களம், பிரதான வீதிகள், மக்கள் குடியிருப்புக்கள் ஆகியவற்றிற்கு நெருக்கடிகள் ஏற்படுமெனவும் இதனால் முகாம் அமைக்கும் பணிகளை இடைநிறுத்துமாறும் கோரியுள்ளனர்.

இறுதியில், பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், கோப்பாய் பிரதேச செயலர் ஆகியோரிடம் மகஜர்கள் கையளிக்கப்பட்டன. இதன் பிரதிகள் பிரதமர், சர்வதேச கண்காணிப்புக் குழு, மனித உரிமை ஆணைக்குழு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. (27)

### உலக சூழல்...

காப்பு வாரமாகவும் பிரகடனப்படுத் தப்பட்ட மேற்படி தினங்களில் அனைத்து நிறுவன இணைப்பாளர்கள், பணியாளர்கள், சமூக பொருளாதார அபிவிருத்திக் குழுக்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் இணைந்து பொதுச் சிரமதானங்கள், மர நடுகை போன்ற செயற்பாடுகளில் ஈடுபடவுள்ளனர்.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களூடாகவும் சூழல் பாதுகாப்புத் தொடர்பான பதாகைகள் கட்டுவதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (பா)

### புளியங்குளத்தில்...

பாதையை விட்டு விலகிக் குடைசாய்ந்தது.

காயமடைந்தவர்கள் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### அரசாங்கத்தின்...

விளக்கங்கள் எவையும் கொடுக்கப்பட்டதாக இல்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அனுப்பி வைத்துள்ள பிரேரணையில், வடக்கு - கிழக்கில் உடனடியானதும், நடுத்தரமானதுமான புனர்வாழ்வு மீள்கட்டுமானப் பணிகள் தொடர்பாக முடிவுகளை எடுப்பதற்கும் கொள்கைகள் முன்னெடுப்புக்களில் ஆலோசனை வழங்குவதற்கும் ஒரு பிரதிநிதித்துவ உயர் மட்ட சபை (Apex Body Council) ஒன்று இருக்கும். இவ் உயர் மட்ட சபை வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்கள் தொடர்பான திட்டமிடல், முன்னுரிமைப்படுத்தல், கண்காணிப்புச் செய்தல் என்பனவற்றிற்குப் பொறுப்பாக இருக்கும்.

இவ் உயர் மட்ட சபை வடக்கு - கிழக்கில் வாழும் இனக்குழுக்களின் உரிமைகளைப் பிரதிபலிக்கும் எல்லா இனங்களினதும் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாக அமையும்.

இலங்கை அரசு விடுதலைப் புலிகளின் அமைப்பின் ஆலோசனையுடன் ஒரு விசேட ஆணையாளரை நியமிக்கும்.

இதேவேளை, வடக்கு - கிழக்கு நிர்வாகத்தை ஒருங்கிணைப்பதற்காக ஒரு சபை உருவாகும். இச்சபை உயர் மட்ட சபையுடன் தொடர்புகள் பேணுவதாக இருக்கும். விசேட ஆணையாளரே இச்சபையின் பிரதான நிர்வாக அதிகாரியாக இருப்பார். வடக்கு - கிழக்கு நிர்வாகத்தை ஒழுங்கமைப்புச் செய்யும் சபை பிரதம மந்திரியினால் தெரிவு செய்யப்படும். இந் நியமனங்கள் புலிகளுடனான கலந்தாலோசனையின் பின் மேற்கொள்ளப்படும்.

நன்கொடையாளர் சமூகத்தின் இணக்கப்பாட்டிற்கு அமைவாக ஒரு நன்கொடையாளர் ஆலோசனைச் சபை அமைக்கப்படும். இச்சபை காலாண்டுக்கு ஒரு முறைகூடி சமூக விகிதாசாரத்திற்கு ஏற்ப வளங்களைப் பயன்படுத்துதல், அமுல்படுத்துதல் ஆகியவற்றிலுள்ள முன்னேற்றங்கள் பற்றி மீளாய்வு செய்வதுடன் அவை சமூக விகிதாசாரரீதியில் செயற்படுகின்றனவா என்பதையும் கவனிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

அதிக அதிகாரங்களுடன் கூடிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பைக் கோரியிருந்த விடுதலைப் புலிகளுக்கு தற்பொழுது அரசாங்கம் அளித்துள்ள புதிய பிரேரணைகள் ஏமாற்றத்தை அளித்துள்ளதோடு அதிருப்தியையும் கொடுப்பதாக அமைந்துள்ளதாக அறிய வருகின்றது.

அரசாங்கத்தின் பிரேரணைகளில் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு என்ற விடயம் தவிர்க்கப்பட்டுள்ளதோடு, அரசாங்கம் பிரேரித்துள்ள புனர்வாழ்வு மீள்கட்டுமான அபிவிருத்திப் பணிகள் தொடர்பான முடிவுகளை மேற்கொள்ளும் உயர் மட்ட சபையில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதித்துவம் தொடர்பாகத் தெளிவாகக் கூறிப்பிட்டபடவில்லை. அத்தோடு, இச்சபைகூட ஓர் ஆலோசனைச் சபை என்ற மட்டத்திலேயே செயற்படும்.

இதேவேளை, வடக்கு - கிழக்கு நிர்வாகத்தை ஒழுங்கமைக்கும் சபையில் விடுதலைப் புலிகளுக்கு பிரதி நிதித்துவம் பெறுவதற்கான வாய்ப்பும் வழங்கப்படவில்லை.

மேலும், விசேட ஆணையாளரையும், நிர்வாகத்தை ஒழுங்கமைக்கும் சபையின் பிரதிநிதிகளையும் பிரதமரே நியமனம் செய்வார் என்பவை போன்ற பிரேரணைகளும் விடுதலைப் புலிகளை ஏமாற்றத்திற்கு உள்ளாக்கியுள்ளதாக புலிகளின் வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

இதேவேளை, அரசாங்கத்தின் பிரேரணைகள் குறித்து விடுதலைப் புலிகளின் பதில் இன்றோ அல்லது நாளையோ அரசாங்கத்திற்கு தெரிவிக் கப்படும் எனத் தெரிய வருகின்றது.

இதில், இப்பிரேரணைகள் குறித்த விடுதலைப் புலிகளின் அதிருப்தி தெரிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### வீரவணக்கம்...

முல்லை. மாவட்டம் மன்னாகண்டல் பகுதியில் நேற்று முன்தினம் நாட்டுப்பற்றாளர் ஒருவர் கிணற்றில் மூழ்கி சாவடைந்துள்ளார்.

நாட்டுப்பற்றாளர்-தங்கையா தசீந்திரன் (ரவி) (154 ஆம் கட்டை செல்வபுரம், கிளிநொச்சி, த.மு. 154 ஆம் கட்டை, தென்னிந்திய திருச்சபை, கிளி நொச்சி.) என்ற நாட்டுப்பற்றாளரே சாவடைந்தவராவார்.

இவர்களுக்குத் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

இயற்கையை நீ அழித்தால்
இயற்கையாய் நீ அழிவாய்

## மரண அறிவித்தல்

### நல்லதம்பி பாக்கியம்

மூதூர் கட்டைபறிச்சானைச் சேர்ந்த நல்லதம்பி பாக்கியம் அவர்கள் 29-05-2003 அன்று காலமானார். இவர் இராமுப்பிள்ளை நல்லதம்பி அவர்களின் அன்புத்துணைவியாரும் சிவஞானசுந்தரம், தங்கநாயகி, செல்வரட்ணம், காலஞ்சென்ற நவரட்ணம் (ஆசிரியர்), தயாநிதி (ஆசிரியை) வாசுகிதேவி, அருண் (போராளி) ஆகியோரின் அன்புத்தாயாருமாவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், போராளிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: மகன் போராளி அருண் (பணிப்பாளர் தமிழீழ சுகாதார சேவைகள்), மருமகள் போராளி யாழினி, பேரன் இசைப்பிரியன், சோமசுந்தரம் குடும்பத்தினர்.

(3297)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மே மாதம் 30ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.